கலை IAS அகாடமி
61/1 காந்தி நகர் ,மோகனூர் ரோடு
நாமக்கல்- 637001
கிளைகள்: கரூர், திருப்பூர், ஈரோடு, சேலம்,திருச்சி
www.kalaiiasacademy.com kalaiiasacademy2013@gmail.com
Ph: 7373036676,7373046676,7373056676

KALAI IAS ACADEMY

**தேர்வு எண் - 07** **OCTOBER 2016**

1. ஓரெழுத்து ஒரு மொழியில் உரிய பொருள் தரும் தொடரைத் தேர்க! “வீ”

**(a) மலர்** (b) வீரம் (c) பெண் (d) வியப்பு

2. ”கண்டனன்” என்ற சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க?

(a) காண்க (b) கண்ட (c) கண் **(d) காண்**

3. தவறானதைத் தேர்ந்தெடு ?

(a) இந்தச் செயலைச் செய்தது யார் - வினாத்தொடர்

**(b) இளமையில் கல் - செய்தித் தொடர்**

(c) என்னே, தமிழின் இனிமை - உணர்ச்சி தொடர்

(d)கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார் - செய்வினை

4. காந்தி சிறையில் தாமே தயாரித்த காலணியை எனக்கு அன்பளிப்பாக அளித்தார், அதனை ஆர்வத்தோடு வாங்கி அணிந்தேன் என் கால்கள் நடுங்கின. நிற்க முடியவில்லை உடனே, அதனை எடுத்துச்சென்று என் பூஜை அறையில் வைத்து வணங்கி வருகிறேன் என்று கூறியவர்?

(a) சர்ச்சில் (b) மவுண்ட்பேட்டன் (c) பென்கிங்ஸ்லி **(d) ஸ்மட்ஸ்**

5. பொருத்துக.

| ஆசிரியர் | | மாணவர் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) நவநீதகிருட்டிண பாரதி | - | 1.இராமலிங்கர் | (a) | 4 | 3 | 2 | 1 |
| (b) மீனாட்சி சுந்தரனார் | - | 2.க. சச்சிதானந்தன் | (b) | 3 | 4 | 2 | 1 |
| (c) சபாபதி | - | 3.வீரமாமுனிவர் | **(c)** | **2** | **4** | **1** | **3** |
| (d) சுப்பிரதீபக் கவிராயர் | - | 4.வேங்கட ரத்தினம் | (d) | 2 | 1 | 4 | 3 |

6. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதனால் தமிழின் இனிமை குறைகிறது எனக் கூறியவர் ?

**(a) சுவாமி வேதாசலம்** (b) வள்ளலார் (c) பாவாணர் (d) பரிதிமாற்கலைஞர்

7. “பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்” எனக் கூறும் நூல்

(a) நாலடியார் (b) மலைபடுகடாம்

(c) சீவகசிந்தாமணி **(d) பெரும்பாணாற்றுப்படை**

8. “புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை

வாய்மையாற் காணப் படும்” இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி?

(a) உவமையணி **(b) எ.டு உவமையணி** (c) தொழில் உவமையணி (d) உருவக அணி

9. உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்

மயர்வற மதிநிலம் அருளினன் யவனவன்” இவ்வரியில் பயின்று வந்துள்ள பாவகை?

(a) வஞ்சிப்பா (b) வெண்பா (c) ஆசிரியப்பா **(d) கலிப்பா**

10. துரைமாணிக்கம் எழுதாத நூலைத் தேர்க

(a) பாவியக்கொத்து **(b) காவியப் பறவைகள்** (c)பள்ளிப் பறவைகள் (d) ஐயை

11. கூற்றுகளை ஆராய்க

கூற்று(A) : யாப்பு என்பது ‘கட்டுதல்’ என்று பொருள்

காரணம்(R) : எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்

**(a) (A)மற்றும் (R) இரண்டும் சரி**

(b) (A) சரி (R) தவறு

(c) (A)தவறு ஆனால் (R)சரி

(d) (A)மற்றும் (R)இரண்டும் தவறானவை

12. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க:

(a)சொஸ்த - உரிமையுடைய

**(b) லிகிதம் - ஆணவம்**

(c) வளவு - வீடு

(d)துபாசி - மொழிபெயர்ப்பாளர்

13. சரியான ஒன்றைத் தேர்க

(a) ஆற்றுநீர்ப் பொருள்கோள் - இருக்கின்ற சொற்களை முறைமாறாமல் வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது

**(b) கொண்டுகூட்டுப் பொருள்கோள் - பல அடிகளில் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது**

(c) நிரல்நிறைப் பொருள்கோள் - சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள் கொள்வது

(d) தாப்பிசைப் பொருள்கோள் - இறுதியில் உள்ள சொற்களை எடுத்து முதலில் வைத்துக் காட்டிப் பொருள் கொள்வது

14. அகர வரிசைப்படி அமைந்த சொற்களை தேர்வு செய்க

(a) கூ, கு, கே, கெ, கை

(b) கெ, கே, கோ, கொ, கௌ

(c) க, கி, கே, கெ, கௌ

**(d) கூ, கெ, கே, கை, கௌ**

15. <u>வானரங்கள்</u> கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

<u>மந்தி</u> சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

அடிக்கோடிட்ட சொல்லின் பொருளை கண்டுபிடி

**(a) ஆண் குரங்கு, பெண் குரங்கு**

(b) தேவர்கள், பெண் குரங்கு

(c) பெண் குரங்கு, ஆண் குரங்கு

(d) தேவர்கள், கமன சித்தர்

KALAI IAS ACADEMY

16. வழூவுச் சொற்களை நீக்குதல்

(a) அறுகா மனை (b) அறுவாள் மன (c) அரிவாள் மணை **(d) அரிவாள் மனை**

17. தகுதி வழக்குக்கு பொருந்தாத சொல்லைக் கண்டறிக

**(a) மரூஉ** (b)மங்கலம் (c) இடக்கரடக்கல் (d) குழூஉக்குறி

18. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க(இலக்கிய வகை சொல்)

(a) பீலி (b)ஆழி **(c)பெற்றம்** (d)உகிர்

19. திருவாரூர் நான்மணிமாலை எத்தனை செய்யுட்களைக் கொண்டது

**(a) 40** (b)100 (c)400 (d)431

20. " திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரியாது'' என்று கூறியவர்

(a)பாரதிதாசன் (b)ஜி.யு.போப்

**(c)கி.ஆ.பெ. விஸ்வநாதன்** (d)ரா.பி. சேதுபிள்ளை

21. ''நீரின்றமையா வுலகம் போலத்
தம்மின் றமைய நந்நயந் தருளி'' இவ்வரி இடம்பெற்றுள்ள நூல்

(a) திருக்குறள் (b)குறுந்தொகை (c)அகநானுறு **(d)நற்றிணை**

22. ''மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியவர் யார்?

(a)சுரதா (b)சூரியநாரயண சாஸ்திரி **(c)பாவணர்** (d)பெருஞ்சித்திரனார்

23. ''தமிழ் நாட்டின் தாகூர் வாணிதாசனார்'' என்று புகழ்ந்தவர்?

(a)பாரதிதாசன் (b)வேங்கிடரமணி **(c)மயிலை சிவமுத்து** (d)இராஜகோபால்

24. மலைகளில் வாழும் பறவைகளில் பொருந்தாத ஒன்று

(a)சின்னக் குறுவான் (b)பொன் முதுகு (c)மின்சிட்டு **(d)கரண்டிவாயன்**

25. அடிப்படையான தமிழ் எழுத்துக்கள் எத்தனை?

(a) 12 **(b)30** (c)18 (d)216

26. 'அவன் உழவன்' என்பதன் இலக்கண குறிப்பு வரைக

**(a) குறிப்பு வினைமுற்று** (b)தெரிநிலை பெயரெச்சம்

(c)தெரிநிலை வினைமுற்று (d)குறிப்பு வினையெச்சம்

27. பிரித்து எழுதுக 'சிறியன்'

**(a) சிறுமை +அன்** (b)சிறி + அன் (c)சிறிய + அன் (d)சிறுமை + அன்

28. நாமார்க்கும் குடியல்லாம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல்லை கண்டறி

(a) துன்பம், துன்பம் (b)இன்பம், எமன் **(c)இன்பம், இன்பம்** (d)எமன், துன்பம்

KALAI IAS ACADEMY

29. <u>செறுநரைக்</u> காணின் சுமக்க இறுவரை

காணின் கிழக்காம் தலை –

இதில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான ஆங்கில எதிர்ச்சொல்லைக் கண்டறி

(a) ENEMY (b)PARENTS (c)BROTHER **(d)FRIEND**

30. உலகம், உயிர், கடவுள், ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் தான் பெரியபுராணம் எனக் கூறியவர்?

**(a) திரு.வி.க** (b)சேக்கிழார் (c)மீனாட்சி சுந்தரனார் (d)சம்பந்தர்

31. அம்புஜத்தம்மாள் பற்றிய கூற்றுகளில் தவறானது

**(a) அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு, எளிமையான குடும்பத்தில் பிறந்தாலும் மிகவும் எளிமையாகவே வாழ்ந்தார்**

(b) காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என அழைக்கப்பட்டார்

(c) ஆங்கிலேய அரசுக்கு எதிராக செயல்பட்டதால் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்

(d) மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலையுணர்வை ஊட்டினார்

32. அகர வரிசைப்படுத்துக

(a) மரப்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், தோல்பாவைக்கூத்து, நிழற்பாவைக்கூத்து

(b) பொம்மலாட்டம், மரப்பாவைக்கூத்து, நிழற்பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து

(c) தோல்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், நிழற்பாவைக்கூத்து, மரப்பாவைக்கூத்து

**(d) தோல்பாவைக்கூத்து, நிழற்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப்பாவைக்கூத்து**

33. சமுதாயச் சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்ற நூற்றாண்டு எது?

(a) 18ம் நூற்றாண்டு **(b)19ம் நூற்றாண்டு** (c)20ம் நூற்றாண்டு (d)17ம் நூற்றாண்டு

34. பொருத்துக.

| சொல் | | வாய்ப்பாடு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) என் | - | 1. பிறப்பு | (a) | 3 | 4 | 1 | 2 |
| (b) படும் | - | 2. காசு | (b) | 4 | 3 | 2 | 1 |
| (c)நாடு | - | 3. நாள் | (c) | 4 | 3 | 1 | 2 |
| (d) உயர்வு | - | 4. மலர் | **(d)** | **3** | **4** | **2** | **1** |

35. <u>அன்பும் ஆர்வமும் அடக்கமும்</u> சேர்ந்தும்

உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்

அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக

(a) முற்றும்மை (b)உயர்வு சிறப்பும்மை **(c)எண்ணும்மை** (d)உம்மைத்தொகை

36. காமராசர் நினைவு இல்லம் அமைந்துள்ள இடம்?

**(a) சென்னை** (b)கன்னியாகுமரி (c)தஞ்சாவூர் (d)விருதுநகர்

37. அறியாமை இருளில் முடங்கிக் கிடந்த கருத்துக் குருடர்களைப் பகுத்தறிவு ஒளிபெற்று விழிப்புறச் செய்தவர்?

(a) பெரியார் (b)பாரதியார் .

(c)விவேகானந்தர் **(d)பாரதிதாசன்**

KALAI IAS ACADEMY

38. அழுக்கில்லா ஆடையே மேன்மை! அதை
அணிவதா லல்லவோ உடற்குண்டாம் தூய்மை –
இந்த வரியினை கூறியவர்?

**(a) எத்திராஜ் அரங்கசாமி** (b)வேங்கடரத்தினம்
(c)வேங்கட மகாலிங்கம் (d)துரை. மாணிக்கம்

39. “உரைநடையில் தமிழின்பம் நுகர வேண்டுமானால் சேதுப்பிள்ளை செந்தமிழைப் படிக்க வேண்டும்” என்று கூறியவர்

(a) சோமசுந்தர பாரதியார் (b)ந.மு. வேங்கடசாமி நாட்டார்
**(c)சுத்தானந்த பாரதியார்** (d)பாரதிதாசன்

40. ஜி.யு. போப் 1900 - ஆம் ஆண்டு திருவாசகத்தை எம்மொழியில் மொழி பெயர்த்தார்?

**(a) ஆங்கிலம்** (b)இலத்தின் (c)தெலுங்கு (d)எபிரேயம்

41. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு?

(a) 1979 (b)1999 (c)1988 **(d)1989**

42. பொருந்தாத ஒன்றினைத் தேர்க:

(a) துவர்ப்பு - ஆற்றல் **(b)இனிப்பு - இனிமை**
(c)உவர்ப்பு - தெளிவு (d)கார்ப்பு - உணர்வு

43. ரா.பி. சேதுப்பிள்ளைக்கு ‘சொல்லின் செல்வர்’ என்னும் விருதினை தருமபுர ஆதினம் வழங்கிய ஆண்டு?

**(a) 1950** (b)1956 (c)1953 (d)1954

44. நூல் பதிப்பில் உ.வே.சா - வுக்கு அடுத்துப் புகழ் பெற்றவர்?

(a) ஆறுமுக நாவலர் (b)சோமசுந்தர பாரதியார்
**(c)சி.வை. தாமோதரன்** (d)கா. நமச்சிவாய முதலியார்

45. ”நெஞ்சில் ஒடும் வஞ்சனை ஆறு வற்றினாலேயே திருவருட்புனல் பொங்கி வழியும்” என்று கூறியவர்?

(a) அர்ச்.ஃபிரான்ஸஸ் **(b)ஆளுடையபிள்ளை** (c)திருமூலர் (d)முகமது சாகோபின்

46. யான்பெற்ற பெருந்தவப்பே(று) என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார் பெற் றாரே –
இந்த வரியில் யார் யாரை போற்றி வணங்கினான்?

(a) கண்ணன், கன்னன் **(b) கன்னன், கண்ணன்**
(c)அருச்சுனன், கன்னன் (d)கண்ணன், அருச்சுனன்

47. தமிழகத்தின் அன்னிபெசன்ட் என இராமாமிர்தம் அம்மையாரை அழைத்தவர்?

(a)முத்துலட்சுமி அம்மையார் (b) அஞ்சலையம்மாள்
**(c)அண்ணா** (d)பெரியார்

48. பொருந்தாத ஒன்றைத் தேர்க – 6-ம் வேற்றுமைத்தொகை

(a) களிற்று மருப்பு **(b)வேற்காளை**
(c)இறவுப்புறம் (d)மனத்திட்பம்

KALAI IAS ACADEMY

49. தவறானதைத் தேர்ந்தெடு

(a)கடுதாசி - போர்ச்சுக்கீசியம்

(b) எக்கச்சக்கம் - தெலுங்கு

**(c)இனாம் - இந்துஸ்தானி**

(d)ஜாஸ்தி - உருது

50. கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய முதல் சிறுகதை எது?

(a) சிவகாமி சபதம் (b)பார்த்திபன் கனவு (c)கள்வனின் காதலி **(d)சாரதியின் தந்திரம்**

51. பாரதியார் கூற்றுகளில் பொருந்தாதது

**(a)"எங்கெங்கு காணினும் சக்தியடா"**

(b) "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

(c)"ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி"

(d)"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்"

52. "யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்" - இவ்வரி இடம்பெற்றுள்ள நூல்?

(a) நற்றினை **(b)குறுந்தொகை** (c)புறநானூறு (d)அகநானூறு

53. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) செருக்கு | - 1.கொழுப்பு | | (a) | 1 | 2 | 3 | 4 |
| (b) நிணம் | - 2.இறுமாப்பு | | (b) | 2 | 1 | 4 | 3 |
| (c) தூமம் | - 3.அகிற்புகை | | **(c)** | **2** | **1** | **3** | **4** |
| (d) ஏமாப்பு | - 4. பாதுகாப்பு | | (d) | 1 | 2 | 4 | 3 |

54. தவறான இணையைத் தேர்ந்தெடு

(a) வன்தொண்டர் - சுந்தரர்

(b) சைவ உலக செஞ்ஞாயிறு - திருநாவுக்கரசர்

**(c) தமிழ் வியாசர் - இளம்பூரணார்**

(d) கவியோகி - சுத்தானந்த பாரதியார்

55. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) நான்மணிக்கடிகை | - 1. நல்லாதனார் | | **(a)** | **4** | **3** | **1** | **2** |
| (b) நாலடியார் | - 2. கணிமேதாவியார் | | (b) | 4 | 3 | 2 | 1 |
| (c) திரிகடுகம் | - 3. சமணமுனிவர்கள் | | (c) | 4 | 1 | 2 | 3 |
| (d) ஏலாதி | - 4. விளம்பிநாகனார் | | (d) | 2 | 4 | 3 | 1 |

56. தமிழ் மூவாயிரம் என்ற சிறப்புப்பெயர் கொண்ட நூல்?

(a) திருவாசகம் (b)தேவாரம் **(c)திருமந்திரம்** (d)திருக்குறள்

KALAI IAS ACADEMY

57. ‘‘செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் தருவது வினையே’’- இதில் ‘‘வினை’’ என்னும் சொல் குறிப்பது

**(a)தெரிநிலை வினைமுற்று** (b)குறிப்பு வினைமுற்று

(c)குறிப்பு பெயரெச்சம் (d)வினைமுற்று

58. ‘‘புள்ளுறு புன்கண் தீர்த்தோன்’’ என்ற தொடரில் ‘‘தீர்த்தோன்’’ என்ற சொல் யாரைக் குறிக்கிறது?

(a)இராசஇராச சோழன் (b)மனுநீதிச் சோழன்

**(c)சிபிச் சக்கரவர்த்தி** (d)கரிகாற்சோழன்

59. ‘‘தென்னம் பொருப்பின் தலைவா வாழி’’ என்னும் அடியில் தென்னம் பொருப்பு குறிப்பது

(a)ஜவ்வாது மலை **(b)பொதிகை மலை**

(c)குடகு மலை (d)ஆனை மலை

60. பறம்பு மலையில் நடைபெற்ற விழாவில் ‘‘கவியரசு’’ என்னும் பட்டம் பெற்றவர் யார்?

(a)துரைமாணிக்கம் **(b)துரைராசு** (c)சுரதா (d)அரங்கசாமி

61. ‘‘துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவைசொட்டும் சந்தநயம் தோய்ந்திருக்கும்’’ என சங்கரதாசு சுவாமிகளைப் புகழ்ந்தவர் யார்?

**(a)புத்தனேரி சுப்பிரமணியம்** (b)பம்மல் சம்பந்தனார் (c)அண்ணா (d)திரு.வி.க

62. ‘‘சரசுவதி’’ என்று சித்தர்கள் எதனைக் குறிப்பிடுகின்றனர்?

(a)அகத்திக்கீரை (b)காசினிக் கீரை (c)பசலைக் கீரை **(d)வல்லாரைக் கீரை**

63. விடைக்கேற்ற வினாவைத் தேர்க

‘‘கற்றோர்க்கு ஆற்றுணா வேண்டுவது இல்’’

(a)ஆற்றுணா வேண்டுமா? **(b)கற்றோர்க்கு எது வேண்டுவதில்?**

(c)எதற்கு ஆற்றுணா வேண்டும்? (d)ஆற்றுணா வேண்டுவது இல்-எது?

64. திருவரங்கப் பெருமானுக்கு பாம்பணை அமைத்த சோழ மன்னன் யார்?

**(a)இராசமகேந்திரன்** (b)இராசாதிராசன்

(c)இராசேந்திரன் (d)முதலாம் இராசராசன்

65. சங்கரதாசு சுவாமிகள் எழுதிய நாடகங்களில் பொருந்தாதது

(a)பவளக்கொடி (b)நல்லதங்காள் **(c)சபாபதி** (d)இலகுவசா

66. மிளகுநீரைச் சாத்தமுது என்பது--------------------

**(a)வைணவர் மரபு** (b)செட்டிநாடு மரபு

(c)வேலூர் ஆம்பூர் வட்டத்தார் மரபு (d)சீரங்கம் கோவில் மரபு

67. ‘‘ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாக பொங்கி வருவது கவிதை’’ என்று கூறியவர்?

(a)கோலட்ரிஜ் (b)கீட்ஸ் (c)ஜான் ரஸ்கின் **(d)வோர்ட்ஸ்வர்த்**

68. சரியான விடையைத் தேர்க

(I) வண்டிகள் ஓடா (II) சென்னை என்ற நகரம்

(III) அவள் தந்தை (IV) அவை எல்லாம்

(a)II மட்டும் (b) I மற்றும்IV **(c) I, III மற்றும்** IV (d) அனைத்தும் சரி

KALAI IAS ACADEMY

69. பண்டையத் தமிழரின் ஏற்றுமதி, இறக்குமதி பற்றி குறிப்பிடும் நூல்கள்?

**(a)பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி** (b)பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை

(c)மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை (d)சிறுபாணாற்றுப்படை, நெடுநல்வாடை

70. காந்தி என்ற திரைப்படத்தில் காந்தியாக வாழ்ந்து காட்டியவர் யார்?

(a)ஜான் ஸ்மேட்ஸ் **(b)பென் கிங்ஸ்லி** (c)பெண் ஸடீபன் (d)ஜான் பிஸ்டலின்

71. உட்கார் நண்பா, நலந்தானா? –நீ
ஒதுங்கி வாழ்வது சரிதானா?
சுட்டுவிரல் நீ சுருங்குவதா? – உன்
சுயபலம் உனக்குள் ஒடுங்குவதா? – என்ற பாடலினை இயற்றியவர் யார்?

(a)பாரதியார் (b)மோகனரங்கன் **(c)தாராபாரதி** (d)மருதகாசி

72. "Dravidian Federation" எனும் ஆங்கில இதழை நடத்தியவர்?

(a)பரிதிமாற்கலைஞர் **(b)மறைமலையடிகள்**

(c)வையாபுரிபிள்ளை (d)இலக்குவனார்

73. மரபுப் பிழை நீக்கிய தொடரைத் தேர்க:

(a)வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது

**(b)வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது.**

(c)வயலில் ஆட்டுக்குட்டிகள் மேய்கிறது.

(d)வயலில் ஆட்டுக்கன்றுகள் மேய்கிறது.

74. தவறான இணையைத் தேர்ந்தெடு:

(a)பசிப்பிணி என்னும் பாவி – மணிமேகலை

(b)உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – புறநானூறு

**(c)வணங்கி வழியொழுகி மாண்டார் சொல் கொண்டு – சிறுபஞ்சமூலம்.**

(d)பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - திருக்குறள்

75. திருவாடுதுறை ஞான தேசிகராகிய அம்பலவான தேசிகமூர்த்திக்கு தொண்டராக விளங்கியவர் யார்?

**(a)சுவாமிநாத தேசிகர்** (b)தாண்டவமூர்த்தி தேசிகர்

(c)காத்தவராய தேசிகர் (d)மயிலேறும் பெருமாள்

76. காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! என்று பாரதிதாசன் எதனை புகழ்ந்துள்ளார்

(a)கல்வி (b)இயற்கை (c)சூரியன் **(d)பத்திரிக்கை**

77. "இந்தியநாடிது என்னுடை நாடே
என்று தினந்தினம் நீயதைப் பாடு" என்ற அடிகொண்ட பாடலைப் பாடியவர் யார்?

(a)பாரதியார் (b)பாரதிதாசன் **(c)நாமக்கல் கவிஞர்** (d)கவிமணி

78. "மாம்பழக்கவி" எனப் போற்றப்படுபவர்

(a)ஆறுமுக நாவலர் **(b)சிங்க நாவலர்**

(c)மாரிமுத்து கவிராயர் (d)குமரகுருபரர்

KALAI IAS ACADEMY

79. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| (a) இடுகுறிப் பொதுப்பெயர் | - | 1. வளையல் | **(a) 3** | **4** | **2** | **1** |
| (b) இடுகுறிச் சிறப்புப்பெயர் | - | 2. பறவை | (b) 4 | 3 | 1 | 2 |
| (c) காரணப் பொதுப்பெயர் | - | 3. மாடு | (c) 3 | 4 | 1 | 2 |
| (d) காரணச் சிறப்புப்பெயர் | - | 4. தென்னை | (d) 4 | 3 | 2 | 1 |

80. திரைக்கவித் திலகம் அ. மருதகாசி பிறந்த ஊர்?

(a)செங்கபடுத்தான் காடு (b)வில்லியனூர் **(c)மேலக்குடிகாடு** (d)பழையனூர்

81. தமிழ் மொழியானது திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்று கூறியவர் யார்?

(a)ஜி.யு போப் **(b)கால்டுவெல்** (c)கமில்சுவலபில் (d)மாக்ஸ்முல்லர்

82. ‘‘தலைவன்’’ – மாத்திரை அளவைக் காண்க

**(a)$3\frac{1}{2}$ மாத்திரை** (b) $4\frac{1}{2}$ மாத்திரை (c) $3\frac{1}{4}$ மாத்திரை (d) 4 மாத்திரை

83. சரியான விடையைத் தேர்க

கார்மேகம் கடுமையாக உழைத்தார், அதனால் வாழ்வில் உயர்ந்தார்

(a)தனிநிலைத்தொடர் **(b)தொடர்நிலைத்தொடர்**

(c)கலவைத்தொடர் (d)உணர்ச்சித்தொடர்

84. சரியான விடையைத் தேர்க

(a)கயிறுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(b)அவன் கவிஞன் அன்று

(c) அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது

**(d)வலப்பக்கச் சுவரில் எழுதாதே**

85. <u>முடிகினன்</u> நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய் -

அடிகோடிட்ட சொல்லுக்கு எதிர்ச்சொல் காண்க.

(a)செலுத்தினன் **(b)நிறுத்தினன்** (c)வந்துள்ளான் (d)சென்றுள்ளான்

86. ‘‘சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை’’ என்று கூறியவர்.

(a)பெரியார் (b)காந்தி **(c)அம்பேத்கர்** (d)காத்தவராயன்

87. தவறான இணையைத் தேர்ந்தெடு

(a)Indian Succession Act - இந்திய வாரிசுரிமைச் சட்டம்

**(b)Substantive Law - ஆவண சட்டங்கள்**

(c)Court Fee Stamp - நீதிமன்றக் கட்டணவில்லை

(d)Indian Evidence Act - இந்தியச் சான்றுச் சட்டம்

KALAI IAS ACADEMY

88. சந்திப்பிழை நீக்கிய சொற்றொடரைத் தேர்ந்தெடு

(a)மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது

(b)மேடைப் பேச்சு மிகுந்தப் பயனை தரவல்லது

(c)மேடைப் பேச்சு மிகுந்தப் பயனைத் தரவல்லது

**(d)மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது**

89. உரிய எழுத்தைத் தேர்ந்தெடு

வ - ம்மருவும் நி – ல்தரும் தண் - ர்ப் பந்தர் வந்த – ந்தார்

**(a) ள, ழ, ணீ, ணை** (b) ல, ழ, ணீ, ணை

(c) ள, ல, ணீ, ணை (d) ள, ல, ணீ, ணை

90. மரபுத்தொடருக்கேற்றப் பொருளைத் தேர்ந்தெடு

“கம்பி நீட்டல்”

(a) எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை

(b) அலைந்து திரிதல்

**(c) சொல்லிக்கொள்ளாமல் செல்லல்**

(d) பயனின்றி இருத்தல்

91. ‘பண்ணொடு தமிழொப்பாய்’ எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்

(a)திருவாசகம் (b)தொல்காப்பியம் **(c)தேவாரம்** (d)திருக்குறள்

92. தமிழர்களின் வீரவிளையாட்டான’ஏறுதழுவுதல்’ சிற்பம் கண்டெடுக்கப்பட்ட இடம்?

(a)ஹரப்பா **(b)மொகஞ்சதாரோ** (c)அரிக்கமேடு (d)ஆதிச்சநல்லூர்

93. ‘முன்னின்ற மெய் திரிதல்’ என்றும் விதிப்படி புணர்வது எது?

(a)பைங்கூழ் (b)சிற்றோடை (c)கருங்குயில் **(d)சேதாம்பல்**

94. பொருந்தாதது

இலக்கணக்குறிப்பு: ‘வினையாலணையும் பெயர்’

(a)உடையான் (b)சூழ்வார் (c)உரவோர் **(d)எய்துவர்**

95. கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு---------- செய்தியைக் கூறுகிறது

(a)கண்ணுக்கு கண் **(b)ஊனுக்கு ஊன்** (c)ஊனுக்கு கண் (d)கண்ணுக்கு ஊன்

96. மேல்வாய் நாக்கின் நுனி தடவுவதனால் பிறப்பது?

**(a) ர், ழ்** (b) ல் (c) ள் (d) ந், ன்

97. “காயுடை நெல்லோடு கரும்பு அமைத்துத்

கட்டி அரிசி அவல் அமைத்து

வாயுடை மறையவர் மந்திரத்தால் வணங்குகின்றேன்” - இவ்வரிகள் யாருடையது?

(a) ந. பிச்சமூர்த்தி (b) கம்பர் **(c) ஆண்டாள்** (d) திரு.வி.க

98. குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் ---------- உயிர்வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.

**(a) குளோரோ ஃபுளூரோ கார்பன்** (b) ஈத்தேன்

(c) கதிரியக்கம் (d) மீத்தேன்

KALAI IAS ACADEMY

99. “வேதம் அனைத்திற்கும் வித்து” என்ற அடைமொழியால் குறிக்கப்படும் நூல்?

(a) திருவெம்பாவை (b) திருவாசகம் **(c) திருப்பாவை** (d) தேவாரம்

100. சாகித்திய அகாடமி பரிசு பெற்ற சிற்பி பாலசுப்ரமணியன் நூல் எது?

(a) தமிழின்பம் (b) கள்ளர் சரித்திரம்

**(c) ஒரு கிராமத்து நதி** (d) ஆகாயத்ததுக்கு அடுத்த வீடு

101. யாருடைய முயற்சியில் 1872 ஆம் ஆண்டு பலதார மணமுறை மற்றும் குழந்தைகள் திருமணம் போன்றவற்றை தடைசெய்யும் சட்டம் இயற்றப்பட்டது.

(a) இராஜாராம் மோகன்ராய் **(b) கேசவ் சந்திரசென்**

(c)தேவேந்திரநாத் தாகூர் (d)வில்லியம் பெண்டிங்பிரபு

102. கீழக்கண்டவற்றைக் கவனி

(I) 1929 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு லாகூரில் ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது

(II) 1929-ல் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுதந்திரம் பெறுவதே இந்திய தேசிய காங்கிரசின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது

(III) டிசம்பர் 31, 1929 ஆம் ஆண்டு நள்ளிரவில் ‘வந்தே மாதரம்’ என்ற பாடலுக்கிடையே ராவி நதிக்கரையில் இந்திய மூவர்ணக்கொடி ஏற்பட்டது.

(IV) ஜனவரி 26, 1930 ஆம் ஆண்டு நாடு முழுவதும் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டது.

(a) I, II, மட்டும் சரி (b) I, III, IV மட்டும் சரி

(c) I, II, III மட்டும் சரி **(d) அனைத்தும் சரி**

103. முகமது அலி ஜின்னா 1940 ஆம் ஆண்டு ----------------- முஸ்லீம் லீக் மாநாட்டில் தனது பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கையை வெளியிட்டார்.

(a) லக்னோ **(b)லாகூர்** (c)காஷ்மீர் (d)பம்பாய்

104. இராஜாஜி குறித்த கூற்றுகளுள் தவறானதைக் கண்டறிக

(a)சுதந்திரா கட்சியைத் தோற்றுவித்து இளம் இந்தியா என்ற பத்திரிக்கையை நடத்தினார்

(b) 1954-ஆம் ஆண்டு இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது

(c)குலக்கல்வி திட்டத்தை தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்

**(d)சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்றார்**

105. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க

**(a) அரசரை உருவாக்குபவர் - சத்யமூர்த்தி**

(b) அரசியல் சாணக்கியர் - இராஜாஜி

(c) இந்தியாவின் பிஸ்மார்க் - சர்தார் வல்லபாய் பட்டேல்

(d) ஏழிசை மன்னர் - தியாகராஜ பாகவதர்

KALAI IAS ACADEMY

106. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி

(I) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி முறை ஒழிப்புச்சட்டம் கொண்டுவர ஆணிவேராக இருந்தார்

(II) ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சென்னை சாந்தோமில் தொடங்கியவர் - முத்துலட்சுமிரெட்டி

(III) 1930-ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தியவர்-முத்துலட்சுமி ரெட்டி

(IV) இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்-முத்துலட்சுமி ரெட்டி

(a) I, II, III, மட்டும் சரி **(b) அனைத்தும் சரி** (c) I, IV, III மட்டும் சரி (d) I, IV மட்டும் சரி

107. சி. என். அண்ணாதுரைக்கு முனைவர் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் எது?

(a) அண்ணா பல்கலைக்கழகம் **(b) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

(c)பாரதியார் பல்கலைக்கழகம் (d) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

108. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க:

(I) வங்காள நிலக்குத்தகைச் சட்டத்தை கொண்டுவந்தவர்---------------------

(II) 1856-ல் பொதுப்பணிப் படைச் சட்டத்தை கொண்டுவந்தவர்--------------------

(III) நாடு இழக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தியவர்----------------------

(IV) துணைப்படைப் திட்டத்தைக் கொண்டுவந்தவர்-------------------------

(a) வெல்லெஸ்லி, கானிங்பிரபு, டல்ஹௌசி, வில்லியம் பெண்டிங்பிரபு

(b) வில்லியம் பெண்டிங், டல்ஹௌசி, கானிங்பிரபு, வெல்லெஸ்லி

**(c) வில்லியம் பெண்டிங், கானிங்பிரபு, டல்ஹௌசி, வெல்லெஸ்லி**

(d) கானிங்பிரபு, வெல்லெஸ்லி, வில்லியம் பெண்டிங், டல்ஹௌசி

109. "மனித இனத்திற்குச் செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி" என்பது யாருடைய போதனை?

(a) விவேகானந்தர் (b) காந்தி

(c)ராமகிருஷ்ண பரமஹம்சர் **(d) இராமலிங்கஅடிகள்**

110. எந்த ஆண்டு சட்டப்படி முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கப்பட்டது?

(a) 1856 பொதுப்பணி சட்டப்படி

**(b) 1909 ஆம் ஆண்டு மிண்டோ-மார்லி சட்டப்படி**

(c) 1919 ஆம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டப்படி

(d) 1935 இந்திய அரசுச்சட்டப்படி

111. கீழ்க்கண்டக் கூற்றை கவனி

(I) 1917-ல் வெளியிடப்பட்ட ஆகஸ்ட் அறிக்கையால் தன்னாட்சி இயக்கம் படிப்படியாக முடிவுக்கு வந்தது.

(II) 1919-ஆம் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி மாகாணங்களில் இரட்டை ஆட்சிமுறை

(III) 1932-ஆம் ஆண்டு பூனா- ஒப்பந்தம் காந்தி-அம்பேத்கார் இடையே ஏற்பட்டது.

(IV) ஆகஸ்ட் நன்கொடையை வெளியிட்டவர்-லின்லித்தோ பிரபு இதனை காங்கிரஸ் ஆதரித்தது.

(a)I, III மட்டும் சரி (b) I, II, IV மட்டும் சரி **(c) I, II , III மட்டும் சரி** (d) அனைத்தும் சரி

KALAI IAS ACADEMY

112. பொருத்துக.

| | | | a b c d |
|---|---|---|---|
| (a)வேலூர் கலகம் | - 1. 1946 | | (a) 1 3 4 2 |
| (b) சென்னை சுதேசி சங்கம் | - 2. 1907 | | (b) 2 4 1 3 |
| (c) சூரத் பிளவு | - 3. 1806 | | (c) 2 3 4 1 |
| (d) நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் | - 4. 1852 | | **(d) 3 4 2 1** |

113. (I) சென்னை சுதேசி சங்கம் 1884 ஆம் ஆண்டு சென்னை மகாஜன சபையுடன் இணைக்கப்பட்டது.

(II) சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் பி. ரங்கையா நாயுடு

**(a) I, II மட்டும் சரி** (b) I, மட்டும் சரி (c) II மட்டும் சரி (d) I, II இரண்டும் சரியல்ல

114. பொருத்தமற்ற இணையைத் தேர்ந்தெடு

(a) இராமகிருஷ்ணமடம் - பேலூர்

(b) அலிகார் இயக்கம் - சர் சையது அகமதுகான்

(c)ஆரிய சமாஜம் - சுவாமி தயானந்த சரஸ்வதி

**(d) திருவருட்பா – நாராயணகுரு**

115. இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் எனவும், இந்திய அரசியல் அமைப்பினை வரைவதற்குப் புதிய திட்டம் அறிவிக்கப்படும் எனவும் அறிவித்தது---------------

(a) 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச்சட்டம்

(b) ஆகஸ்ட் நன்கொடை-1940

**(c) கிரிப்ஸ் தூதுக்குழு -1942**

(d) அமைச்சரவை தூதுக்குழு -1946

116. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி

(I) படைவீரர்கள் வெளிப்படையாகப் புரட்சியில் ஈடுபட்டது –மீரட்

(II) 1857 பெரும்புரட்சியின்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் - கானிங்பிரபு

(III) 1857 பெரும்புரட்சியை ஆங்கில வரலாற்று அறிஞர்கள் முதல் இந்திய சுதந்திரப் போர் என்று அழைத்தனர்

(IV) அயோத்தி நவாபின் மனைவி- பேகம் ஹஸ்ரத் மஹால்

**(a) I, II, IV மட்டும் சரி** (b) I, III, IV மட்டும் சரி (c) I, III மட்டும் சரி (d) I, IV மட்டும் சரி

117. கூற்று (A) : 1907-ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து தீவிரவாதிகள் வெளியேறினர்.

காரணம் (R) : 1907-ல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் மிதவாத, தீவிரவாத காங்கிரஸ் தலைவர்களிடையே தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் பிரச்சனை ஏற்பட்டது.

(a) கூற்று (A) சரி காரணம் (R)தவறு.

(b) கூற்று (A) தவறு காரணம் (R) சரி.

**(c) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி.(R) என்பது A விற்கான சரியான விளக்கம்**

(d) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி R என்பது A விற்கான சரியான விளக்கமல்ல

KALAI IAS ACADEMY

118. 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30ம் நாள் காந்திஜி சுட்டுக்கொலைசெய்யப்பட்ட போது "நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து விட்டது" என்றவர்?

(a) நேதாஜி (b) வல்லபாய்படேல் **(c) ஜவஹர்லால் நேரு** (d) இராஜேந்திரபிரசாத்

119. காந்தி-இர்வின் ஒப்பந்தம்-1931ன் படி தவறான கூற்றைத் தேர்வு செய்க

(a) சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.

(b) இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டது.

(c) போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்ய ஆங்கில அரசு ஒப்புக்கொண்டது.

**(d) உப்புசட்டங்களை திரும்ப பெறுவதில்லை என்று ஆங்கில அரசு ஒப்புக்கொண்டது.**

120. சுதேசி கப்பல் நிறுவனத்தை வ.உ.சி தோற்றுவித்து --------- மற்றும் ------------ இடையே கப்பல் போக்குவரத்தை மேற்கொண்டார்.

(a) கொழும்பு-தூத்துக்குடி **(b) தூத்துக்குடி-கொழும்பு**

(c) தூத்துக்குடி-சென்னை (d) தூத்துக்குடி-கன்னியாகுமரி

121. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க

(a) ஆந்திர பல்கலைக்கழகம்-1925

(b) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-1929

(c) இந்து சமய அறநிலையச் சட்டம்-1926

(d) **பெண்களுக்கு வாக்குரிமை-1924**

122. காமராஜர் குறித்த கூற்றுகளில் தவறற்ற கூற்றைத் தேர்வு செய்க

**(a) 1924ஆண்டு வைக்கம் சத்தியாகிரகம் போராட்டத்தின் மூலம் சுதந்திர போராட்டத்தில் இணைத்துக்கொண்டார்.**

(b) 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

(c) 1940-ஆம் ஆண்டு தனது சத்தியாகிரக போராட்ட திட்டங்களுக்கு காந்தியிடம் அனுமதி பெற கொல்கத்தா சென்றார்

(d) 1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தபோது இராஜாஜி வீட்டில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்.

123. கீழ்க்கண்டவற்றில் பெரியாரோடு தொடர்பற்ற பத்திரிக்கையைத் தேர்வு செய்க

(a) புரட்சி (b)விடுதலை (c)குடியரசு **(d)சுதேசமித்ரன்**

124. பெரியார் குறித்த கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்வு செய்க

(a) 1919-ஆம் ஆண்டு காங்கிரசில் இணைந்தார்.

(b) 1925-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

(c) 14-அம்ச சோஷலிச அறிக்கையினை வெளியிட்டார்.

**(d) 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிகட்சி, திராவிட முன்னேற்ற கழகம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.**

125. தமிழ்நாட்டில் உப்புச் சத்தியாகிரகம் சி. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில்--------------லிருந்து ----------------------வரை நடைபெற்றது.

(a) திருச்சியிலிருந்து வேளாங்கண்ணி (b)மதுரையிலிருந்து நாகப்பட்டினம்

**(c)திருச்சியிலிருந்து வேதராண்யம்** (d)மயிலாடுதுறையிலிருந்து வேளாங்கண்ணி

KALAI IAS ACADEMY

126. நீதிகட்சி தமிழில்-----------------------,தெலுங்கில்----------------,ஆங்கிலத்தில்------------- ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.

(I) ஜஸ்டிஸ், ஆந்திர பிரகாசிகா, திராவிடன்

(II) திராவிடன், ஜஸ்டிஸ், ஆந்திர பிரகாசிகா

**(III) திராவிடன், ஆந்திர பிரகாசிகா, ஜஸ்டிஸ்**

(IV)திராவிடன், ஆந்திர பிரகாசிகா, ரிவோல்ட்

127. முழுசுதந்திரம் தவிர வேறு எதனாலும் நான் திருப்தி அடையமாட்டேன் நாம் அதற்காக வாழ்வோம் (அல்லது) வீழ்வோம். இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அதற்காக செத்து மடிவோம் என்று புரட்சி முழக்கமிட்டவர் யார்?

(a) ஜவஹர்லால் நேரு **(b)காந்தி**

(c) நேதாஜி (d)வல்லபாய்படேல்

128.கீழ்க்கண்ட கூற்றைக் கவனி

(I) 1919 ஏப்ரல் 6-ம் நாள் நாடு முழுவதும் ரௌலட் சட்டத்தை எதிர்த்து மறியல் போராட்டம் நடைபெற்றது.

(II) 1919 ஏப்ரல் 13 ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது.

(III) ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து இரவீந்திரநாத் தாகூர் தனது நைட்வுட் பட்டத்தைத் துறந்தார்.

(IV)ரௌலட் சட்டம், உத்தரவின்றி எவரையும் கைது செய்யவும் விசாரணை செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டது.

(a) I, II, III மட்டும் சரி (b) I, II மட்டும் சரி (c) I, IV III மட்டும் சரி **(d)அனைத்தும் சரி**

129. பொருத்தமற்ற இணையை தேர்வு செய்க

(a) உண்மையை தேடுவோர் சங்கம் (1873) - ஜோதிபாபூலே

(b)தர்ம பரிபாலன யோகம் (1903) - ஸ்ரீநாரயண குரு

(c)பகிஷ்கிருத்திகாரணிகா சபா (1924) - அம்பேத்கர்

**(d)அலிகார் இயக்கம் - நவாப் சலிமுல்லாகான்**

130. பாலகங்காதர திலகர் குறித்து தவறான கூற்றைக் கண்டறிக

**(a) காங்கிரஸின் மிதவாதத் தலைவராகச் செயல்பட்டார்**

(b)லோகமான்ய திலகர், மராத்தியில் கேசரி பத்திரிக்கையை நடத்தினார்.

(c)சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் என்று முழங்கினார்.

(d)கணபதி மற்றும் சிவாஜி பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வைத் தூண்டினார்

131. துறத்தல் மற்றும் சேவை இரண்டுமே நவீன இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்க வேண்டும் எனக்கூறியவர்------------------

(a)இராமகிருஷ்ண பரமஹம்சர் **(b)சுவாமி விவேகானந்தர்** (c)வள்ளலார் (d)ஜோதிபாபூலே

132. 1923 ஆம் ஆண்டு சுயராஜ்ஜியக் கட்சியைத் தோற்றுவித்தவர்கள்

(a)மோதிலால் நேரு, C காந்தி (b)ஜவஹர்லால்நேரு, C காந்தி

**(c)மோதிலால் நேரு, C.R தாஸ்** (d)ஜவஹர்லால் நேரு, C.R. தாஸ்

KALAI IAS ACADEMY

133. காலமுறை வரிசைப்படுத்துக

(I) சைமன் குழு அமைத்தல் (II) சைமன் குழு இந்தியா வருகை

(III) வகுப்புவாத அறிக்கை (IV)உப்புசத்தியாகிரகம்

**(a) I, II, IV, III** (b) I, II, III, IV (c) I, III, IV, II (d) I, IV, III, II

134. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி

(a) டெல்லியை நோக்கிச் செல் என்பது சுபாஸ்சந்திரபோசின் முழக்கம்

(b) 1947ஜூன் 3-ல் மவுண்ட்பேட்டன் திட்டம்(அ) ஜூன்-3 திட்டம் வெளியிடப்பட்டது.

(c) ஆங்கில அரசின் கடைசித் தலைமை ஆளுநர்-மவுண்ட்பேட்டன்

(d) ஜூன்-3 திட்டத்தை காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் கட்சி ஆகியவை புறக்கணித்தது.

**(a) மட்டும் சரியல்ல** (b) II, III, மட்டும் சரியல்ல

(c) II மட்டும் சரியல்ல (d) II, IV மட்டும் சரியல்ல

135. பொருத்தமற்ற இணையைத் தேர்வு செய்க

(a) தியோசோபி – கடவுளைப் பற்றிய ஆய்வு

(b) யுனஸ்கோ தொடங்கப்பட்ட ஆண்டு -1946

(c) இராமகிருஷ்ண இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு -1897

**(d) சிகாகோ உலக சமய மாநாடு -1894**

136. சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது

**(a) தேசியம்** (b) புரட்சி (c) கலகம் (d) கிளர்ச்சி

137. 1939 காங்கிரஸ் 8 மாநிலங்களில் அமைச்சரவை ராஜினாமா செய்ததை 1939 செப்டம்பர் 22-ம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாடியவர்?

(a) முகமது ஷா **(b) முகமது அலிஜின்னா**

(c) சவுகத் அலி (d) நவாப் சலிமுல்லாகான்

138. காலமுறை வரிசைப்படுத்துக:

(i) இரண்டாம் உலகப் போர் முடிவு

(ii) காபினேட் தூதுக்குழு இந்தியா வருகை

(iii) மவுண்ட்பேட்டன் திட்டம்

(iv) கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியா வருகை

(a) II, I, III, IV, (b) IV,II, III, I, (c) IV, III,II,I **(d) IV,I,II,III**

139. தமிழ்நாட்டின் முதலமைச்சராக காமராஜர் எத்தனை வருடங்கள் பதவி வகித்தார்?

**(a) 9 வருடங்கள்** (b) 8 வருடங்கள் (c) 10 வருடங்கள் (d) 7 வருடங்கள்

140. மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட மதராஸ் மாகாணத்தின் முதல் அமைப்பு

(a) இந்திய தேசிய காங்கிரஸ்

(b) முஸ்லீம் லீக்

(c) சுயராஜ்ஜிய கட்சி

**(d) மதராஸ் மாகாண அமைப்பு**

KALAI IAS ACADEMY

141. 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றிபெற்று --------- தலைமையில் ஆட்சி அமைத்தது?

(a) திரு. சுப்புராயலு (b) திரு. T.M. சிவஞானம்

**(c) ப. முனுசாமி நாயுடு** (d) பொப்பிலி ராஜா

142. சைதன்யரை கௌரவிக்கும் வகையில் பிரேம மந்திர் என்னும் கோயிலைக் கட்டியவர் யார்?

(a) வள்ளலார் (b) நாராயணகுரு

**(C) ஸ்ரீ பாதசாது மகாராஜா** (d) ஜோதிபாபுலே

143. கீழ்க்கண்டவற்றில் இராஜாராம் மோகன்ராய் நூல்களை தேர்வு செய்க:

(i) ஏசுகிருஸ்துவின் கட்டளைகள்

(ii) அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி

(iii) சத்யார்த்த பிரகாஷ்

(iv) வேதபாஷ பூமிகா

(a) i, iv,iii மட்டும் **(b) i , ii மட்டும்** (c) i , iv, ii மட்டும் (d) i , ii, iii, iv அனைத்தும்

144. அலிகாரில் சர் சையது அகமதுகான் ----- ஆண்டில் முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியைத் தோற்றுவித்தார்

(a) 1873 (b) 1874 **(c) 1875** (d) 1876

145. ஐ.நா. சபை ---------ம் ஆண்டு தோன்றியது

(a) **அக்டோபர் 24 1945**

(b) அக்டோபர் 26 1946

(c) அக்டோபர் 26 1945

(d) அக்டோபர் 24 1946

146. ஐ.நா. பொதுசபையின் தலைவராக 1953 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்

(a) சுதேச கிருபாளினி (b) அன்னிபெசன்ட்

**(c) விஜயலட்சுமி பண்டிட்** (d) அருணா அசப் அலி

147. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் யாது?

**(a) திஹேக்** (b) பெர்லின் (c) ரோம் (d) டோக்கியோ

148. 1857 பெரும்புரட்சியின் போது காலாட் படைப்பிரிவு ------லிருந்து -----க்கு மாற்றப்பட்டது.

(a) மீரட்டிலிருந்து பராக்பூருக்கு **(b) பராக்பூரிலிருந்து மீரட்டிற்கு**

(c) டெல்லியிலிருந்து மீரட்டிற்கு (d) மீரட்டிலிருந்து டெல்லிக்கு

149. பொருத்துக :

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| (a) டெல்லி | - 1. பேகம் ஹஸ்ரத்மஹால் | | (a) | 3 | 4 | 1 | 2 |
| (b) மத்திய இந்தியா | - 2. நானாசாகிப் | | (b) | **3** | **4** | **2** | **1** |
| (c) கான்பூர் | - 3. இரண்டாம் பகதூர்ஷா | | (c) | 4 | 3 | 1 | 2 |
| (d) லக்னோ | - 4. ஜான்சி இராணி லெட்சுமி பாய் | | (d) | 4 | 3 | 2 | 1 |

KALAI IAS ACADEMY

150. திவாலாகிக் கொண்டு இருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை என காந்தி எதனைக் குறிப்பிடுகிறார்?

(a) ஆகஸ்ட் நன்கொடை (b) ஆகஸ்ட் அறிக்கை

**(c) கிரிப்ஸ் தூதுக்குழு** (d) அமைச்சரவைத் தூதுக்குழு

151. BRICS இளைஞர் மாநாடு 2016 ஜூலையில் எந்த இடத்தில் நடைபெற்றது?

(a) புதுடெல்லி (b) பெல்ஜியம் (c) ஜெய்பூர் **(d) கவுகாத்தி**

152. கலிங்கா சிக்ஷா சாத்தி யோஜனா என்னும் மாணவர்களுக்கான 1% வட்டியில் கல்விக் கடன் வசதி செய்துள்ள மாநிலம்

(a) தெலுங்கானா **(b) ஒடிஸா** (c) குஜராத் (d) கேரளா

153. ஹவாய்தீவு பகுதியில் நடைபெற்ற இந்தியா உள்ளிட்ட 26 நாடுகள் பங்கேற்ற மிகப்பெரிய கடற்பயிற்சி

(a) North Thunder 2016 (b) Exercise JALRAHAT

(c) **RIMPAC 2016** (d) UNIVAC 2016

154. 2016 ரியோ ஒலிம்பிக்கின் இந்திய அணியின் ஸ்பான்சர் நிறுவனம் எது?

(a) **AMUL** (b) PARLE (c) SONY (d) PEPSI

155. உலகின் முதல் மின்சாரசாலை அமைத்துள்ள நாடு?

(a) சுவிட்சர்லாந்து (b) நியூசிலாந்து (c) ஜெர்மனி (d) **சுவீடன்**

156. 'வருணாஸ்திரா' என்பது எதனோடு தொடர்புடையது?

(a) விமானப்படை ஒத்திகைப் பயிற்சி (b) புதிய போர் விமானம்

(c) **நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணை** (d) விமான படையின் கௌரவ பட்டம்

157. இந்தியாவின் முதல் தீவு மாவட்டம் என்ற சிறப்புடன் மாவட்டமாக அறிவிக்கப்பட்ட தீவு பகுதி எது?

(a) மாவ்லினாங் தீவு (b) கவரட்டி தீவு

(c) **மசூலி தீவு** (d) மினிக்காய் தீவு

158. ஜார்கண்ட் மாநில அரசினால் உலகவங்கி உதவியுடன் 14 முதல் 24 வயது பெண்கள் நலனுக்கான திட்டம்?

(a) **தேஜஸ்வானி** (b) சக்தி பச்சோ

(c) சீதாபதி யோஜனா (d) மகிளா சக்தி யோஜனா

159. மத்திய அரசின் கேலோ இந்தியா (Khelo India) திட்டத்தின் நோக்கம்?

(a) **நாட்டு மக்களிடையே விளையாட்டு ஆர்வம் ஊக்குவித்தல்**

(b) ஆண் பெண் பாலின விகிதத்தை அதிகரித்தல்

(c) தாயிடம் இருந்து குழந்தைக்கு HIV பரவுதலை 2020 க்குள் முற்றிலும் தடுத்தல்

(d) பாரம்பரிய கைவினை கலைகளை மீட்டு மறுவாழ்வு அளித்தல்.

160. RBI – ன் துணை கவர்னராக ஜூலை 2016 – ல் நியமிக்கப்பட்டவர்?

(a) அருந்ததி பட்டாசார்யா (b) அருந்ததி ராய்

(c) **N.S. விஸ்வநாதன்** (d) உர்ஜித் பட்டேல்

KALAI IAS ACADEMY

161. பொருத்துக:

| தனிமங்கள் | | தாதுக்கள் | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| (a) பாதரசம் | - | 1. கலீனா | **(a) 4** | **1** | **2** | **3** |
| (b) காரீயம் | - | 2. பாக்ஸைட் | (b) 1 | 2 | 3 | 4 |
| (c) அலுமினியம் | - | 3. மஸ்கோவைட் | (c) 3 | 2 | 1 | 4 |
| (d) மைக்கா | - | 4. சின்னபார் | (d) 4 | 3 | 2 | 1 |

162. வங்காளத்தின் துயரம் என்றழைக்கப்படும் நதி -----?

(a) பிரம்மபுத்திரா (b) மாண்டவி (c) தீஸ்டா **(d) தாமோதர்**

163. இந்திய சினிமாவின் தந்தை

**(a) தாதா சாஹேப் பால்கே** (b) சத்ரபதி சிவாஜி

(c) பாலசந்திர நமதே (d) மனோஜ் குமார்

164. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| (a) ஔரங்கசீப் | - | 1. ஜலாலுதீன் முகமது | (a) 4 | 3 | 1 | 2 |
| (b) ஜஹாங்கீர் | - | 2. சலீம் | (b) 4 | 3 | 2 | 1 |
| (c) அக்பர் | - | 3. குர்ரம் | **(c) 4** | **2** | **1** | **3** |
| (d) ஷாஜகான் | - | 4. ஆலம்கீர | (d) 4 | 2 | 3 | 1 |

165. தேசிய சர்க்கரை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?

(a) புதுடெல்லி **(b) கான்பூர்** (c) பெங்களுர் (d) பூனே

166. தவறான இணையைத் தோந்தெடுக

(a) யோகேஸ்வா் தத் - மல்யுத்தம்

**(b) சாய்னா நெஹ்வால் - டென்னிஸ்**

(c) சரிதா தேவி - குத்துச் சண்டை

(d) ரஞ்சன் ஜோதி - துப்பாக்கி சுடுதல்

167. சட்டிஸ்கர் மாநிலத்தில் உள்ள பிலாய் இரும்பு எ∴கு தொழிற்சாலை எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?

(a) மேற்கு ஜெர்மனி (b) பிரிட்டன் **(c) ரஷ்யா** (d) அமெரிக்கா

168. உலக நுகர்வோர் இயக்கத் தந்தை.

(a) ஆல்பர்ட் மார்ஷல் (b) அமர்த்தியா சென் (c) ஆடம்ஸ்மித் **(d) ரால்ப் நாடார்**

169. சரியானவற்றைத் தேர்ந்தெடு

(i) அரசியலமைப்பு திருத்த மசோதாவை கூட்டு கூட்டத்தில் நிறைவேற்ற முடியாது.

(ii) அரசியலமைப்பு திருத்தம் செய்யும் முறை தென் ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

(iii) அரசியலமைப்பு திருத்தம் பற்றி குறிப்பிடும் விதி-368 ஆகும்.

(iv) அரசியலமைப்பு திருத்தம் பற்றி குறிப்பிடும் பகுதி-XX ஆகும்.

(a) (i) ஐத் தவிர அனைத்தும் சரி (b) (i), (ii), (iv),சரி

(c) (i), (ii), (iii),சரி **(d) அனைத்தும் சரி**

KALAI IAS ACADEMY

170. சரியாகப் பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடுக:

(a) முதல் புத்த மாநாடு - வைசாலி

(b) இரண்டாவது புத்த மாநாடு - ராஜகிருகம்

**(c) மூன்றாவது புத்த மாநாடு - பாடலிபுத்திரம்**

(d) நான்காவது புத்த மாநாடு - மாண்டலே

171. மின்கசிவினால் ஏற்படும் தீயை அணைக்கப் பயன்படுவது----------

(a) திட கார்பன்-டை-ஆக்ஸைடு (b) திட கார்பன்-மோனாக்ஸைடு

(c) கார்பன் டெட்ரா குரோரைடு **(d) a & c**

172. பொருத்துக :

| திட்டம் | ஆண்டு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| (a) TRYSEM | 1. 1985 | (a) | 4 | 3 | 2 | 1 |
| (b) IRDP | 2. 1983 | **(b)** | **3** | **4** | **2** | **1** |
| (c) RLEGP | 3. 1979 | (c) | 4 | 2 | 3 | 1 |
| (d) IAY | 4. 1978 | (d) | 1 | 2 | 4 | 3 |

173. செல்பகுப்பு நிலையில் ஒத்திசைவான இரண்டு குரோமோசோம்கள் இணைவது எதில் நடைபெறுகிறது?

(a) லெப்டோடின் (b) பாக்கிடின் **(c) சைக்கோடின்** (d) டிப்ளோடின்

174. விஜயநகரப் பேரரசை நிறுவியவர்கள் ---------

(a) ஹரிஹரர் மற்றும் வித்யாதரண்யர் **(b) ஹரிஹரர் மற்றும் புக்கர்**

(c) கிருஷ்ணதேவராயர் மற்றும் புக்கர் (d)ஹரிஹரர் மற்றும் கிருஷ்ணதேவராயர்

175. அக்குவா போர்டிஸ் என்பது எந்த அமிலத்தைக் குறிக்கிறது?

(a) $H_2SO_4$ **(b) $HNO_3$** (c) HCL (d) HF

176. 8 ஆண்கள் மற்றும் 12 சிறுவர்கள் சேர்ந்து ஒரு வேலையை 10 நாட்களில் செய்து முடிப்பர். அதே வேலையை 6 ஆண்கள் மற்றும் 8 சிறுவர்கள் சேர்ந்து 14 நாட்களில் செய்து முடிப்பர். ஒரு ஆண் தனியாக அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்?

(a) 280 (b) 360 **(c) 140** (d) 70

177. 3 நாற்காலிகள் மற்றும் 2 மேசைகளின் மொத்த விலை ரூ. 700 மேலும் 5 நாற்காலிகள் மற்றும் 3 மேசைகளின் மொத்தவிலை ரூ. 1100 எனில், 2 நாற்காலிகள் மற்றும் 3 மேசைகளின் மொத்தவிலையைக் காண்க.

**(a) ரூ. 800** (b) ரூ. 1200 (c) ரூ. 600 (d) ரூ. 700

178. ஒரு இரண்டு இலக்க எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 11. இலக்கங்களை இடமாற்றி அமைக்கும் போது கிடைக்கும் எண் முந்தைய எண்ணைவிட 9 குறைவு எனில் அந்த எண்ணைக் கண்டுபிடி.

(a) 56 (b) 74 **(c) 65** (d) 47

179. $\frac{1}{x} + \frac{1}{y} = 4$ மற்றும் $\frac{2}{x} + \frac{3}{y} = 7$ $(x \neq 0, y \neq 0)$ எனில் x மற்றும் y யின் மதிப்பைக் காண்க.

(a) $5, -1$ (b) $-5, \frac{1}{5}$ (c) $\frac{-1}{5}, 1$ **(d) $\frac{1}{5}, -1$**

KALAI IAS ACADEMY

180. தருமபுரி பேருந்து நிலையத்திலிருந்து பாலக்கோட்டிற்கு இரண்டு பயணச்சீட்டுகளும், காரிமங்கலத்திற்கு மூன்று பயணச்சீட்டுகளும் வாங்க மொத்த கட்டணம் ரூ. 32. பாலக்கோட்டிற்கு மூன்று பயணச்சீட்டுகளும், காரிமங்கலத்திற்கு ஒரு பயணச்சீட்டும் வாங்க மொத்த கட்டணம் ரூ. 27, தருமபுரியிலிருந்து, பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் செல்ல கட்டணங்களைக் காண்க.

**(a) ரூ. 7, ரூ. 6** (b) ரூ. 6, ரூ. 7 (c) ரூ.14, ரூ. 18 (d) ரூ. 12, ரூ. 21

181. 11 பென்சில்கள் மற்றும் 3 அழிப்பான்களின் மொத்த விலை ரூ. 50. மேலும் 8 பென்சில்கள் மற்றும் 3 அழிப்பான்களின் மொத்த விலை ரூ. 38 எனில் ஒரு பென்சில் மற்றும் ஒரு அழிப்பான் விலையைக் காண்க.

(a) ரூ. 4, ரூ. 6 **(b) ரூ. 4, ரூ. 2** (c) ரூ.2, ரூ. 6 (d) ரூ. 6, ரூ. 2

182. ஒரு வேலையைச் செய்ய A - க்கு B - யை விட 6 நாட்கள் குறைவாகத் தேவைப்படுகிறது. இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்தால் அதை 4 நாட்களில் முடிக்க இயலும் எனில் B தனியே அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிக்க முடியும்?

**(a) 9 நாட்கள்** (b) 15 நாட்கள் (c) 2 நாட்கள் (d) 10 நாட்கள்

183. $x^2 + 5kx + 16 = 0$ என்ற சமன்பாட்டிற்கு மெய்யெண் மூலங்கள் இல்லையெனில்.

(a) $k > \frac{8}{5}$ (b) $k > \frac{-8}{5}$ **(c) $\frac{-8}{5} < k < \frac{8}{5}$** (d) $0 < k < \frac{8}{5}$

184. $3x + 6y + 7 = 0$ மற்றும் $2x + ky = 5$ ஆகிய நேர்கோடுகள் செங்குத்தானவை எனில், k - யின் மதிப்பு.

(a) 1 **(b) −1** (c) 2 (d) $\frac{1}{2}$

185. $(x+a)(x+b)(x+c) = x^3 - 10x^2 + 45x - 15$ எனில், $a + b + c, \frac{1}{a} + \frac{1}{b} + \frac{1}{c}$ மற்றும் $a^2 + b^2 + c^2$ ஆகியவற்றைக் காண்க.

(a) −10, −3, −10 (b) 10, −3, −10 (c) 10, 3, −10 **(d) −10, −3, 10**

186. ஒரு மகிழுந்து புறப்பட வேண்டிய நேரத்திலிருந்து 30 நிமிடம் தாமதமாகப் புறப்பட்டது. 150 கி.மீ தூரத்தில் உள்ள சேருமிடத்தை சரியான நேரத்தில் சென்றடைய அதனுடைய வழக்கமான வேகத்தை மணிக்கு 25 கி.மீ அதிகப்படுத்த வேண்டியிருந்தது எனில், மகிழுந்தின் வழக்கமான வேகத்தைக் காண்க.

(a) 100 கி.மீ/மணி **(b) 75 கி.மீ/மணி** (c) 125 கி.மீ/மணி (d) 50 கி.மீ/மணி

187. A என்பவர் B - யை விட இருமடங்கு வேலை செய்யும் திறன் பெற்றவர். B ஒரு வேலையை தனியாக 12 நாட்களில் முடிப்பார் எனில் A மற்றும் B இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க ஆகும் நாட்களின் எண்ணிக்கை.

**(A) 4 நாட்கள்** (B) 6 நாட்கள் (C) 8 நாட்கள் (D) 18 நாட்கள்

188. 24 நாட்கள் 180 பணிகளை 15 நாட்களில் முடிப்பர் எனில் 240 பணிகளை 12 நாட்களில் முடிக்கத் தேவைப்படும் ஆட்களின் எண்ணிக்கையைக் காண்க.

(a) 38 **(b) 40** (c) 42 (d) 44

KALAI IAS ACADEMY

189. ஒரு விலங்கியல் பூங்காவில், மான்களும், மயில்களும் உள்ளன. அவற்றின் தலைகளின் எண்ணிக்கை 80. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 200 எனில் எத்தனை மான்கள் உள்ளன.

**(a) 20** (b) 30 (c) 50 (d) 60

190. ஒரு வேலையை செய்து முடிக்க A எடுக்கும் நாட்கள் 25 மற்றும் B எடுக்கும் நாட்கள் 20 ஆகும். அவ்வேலையை A செய்யத் தொடங்கியதிலிருந்து 10 நாட்களுக்கு பின்னர் B சேர்ந்து செய்கின்றார். அவ்வேலையைச் செய்து முடிக்க எடுத்துக்கொண்ட நாட்கள்?

(a) $12\ \frac{1}{2}$ (b) $14\ \frac{2}{9}$ (c) 15 **(d) $16\ \frac{2}{3}$**

191. A மற்றும் B சேர்ந்து ஒரு வேலையை 15 நாட்களில் செய்து முடிப்பர். இதே வேலையை தனியாக B 60 நாட்களில் செய்து முடிப்பர் எனில்,

(a) A யை விட B இரு மடங்கு நல்ல வேலைக்காரர்
(b) B யை விட A இரு மடங்கு நல்ல வேலைக்காரர்
**(c) B யை விட A மும் மடங்கு நல்ல வேலைக்காரர்**
(d) A யை விட B மும் மடங்கு நல்ல வேலைக்காரர்

192. A யும், B யும் சேர்ந்து ஒரு வேலையை 30 நாட்களில் முடிக்க முடியும். இருவரும் அந்த வேலையை 20 நாட்கள் சேர்ந்து செய்தனர். பிறகு B ஆனவர் வேலைக்கு வரவில்லை. A மட்டும் மீதமுள்ள அந்த வேலையை 20 நாட்கள் செய்து முடித்தார் எனில் A மட்டும் முழுவதும் அந்த வேலையை செய்ய எத்தனை நாட்கள் ஆகும்.

(a) 48 நாட்கள் (b) 50 நாட்கள் (c) 54 நாட்கள் **(d) 60 நாட்கள்**

193. $a + b + c = 15$ மற்றும் $ab + bc + ca = 25$ எனில், $a^2 + b^2 + c^2$ காண்க.

(a) 225 (b) 275 **(c) 175** (d) 245

194. 13 ஆட்கள் ஒரு வேலையை 28 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 7 ஆட்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

**(a) 52 நாட்கள்** (b) 56 நாட்கள் (c) 35 நாட்கள் (d) 42 நாட்கள்

195. ஒரு தண்ணீர் தொட்டியை இரு குழாய்கள் தனித்தனியாக 12 நிமிடங்களில் 20 நிமிடங்களில் நிரப்புகின்றன. வெளியேற்றும் குழாயானது ஒரு நிமிடத்திற்கு 30 கேலன் நீரை வெளியேற்றுகிறது. மூன்று குழாய்களும் திறந்திருக்கும் போது தண்ணீர் தொட்டி 30 நிமிடங்களில் நீர் நிரம்புகிறது எனில், அத்தொட்டியின் கொள்ளளவு.

(a) 600 கேலன்கள் (b) 400 கேலன்கள் **(c) 300 கேலன்கள்** (d) 500 கேலன்கள்

196. இரண்டு குழாய்கள் ஒரு தொட்டியை முறையே 10 மணி மற்றும் 12 மணி நேரத்தில் நிரப்ப கூடியவை. மேலும் மூன்றாவது ஒரு குழாய் ஆனது முழு தொட்டியையும் 20 மணி நேரத்தில் காலி செய்யக் கூடியது. முன்று குழாய்களும் ஒரே நேரத்தில் செயல்பட்டால் தொட்டி முழுவதும் நிரம்ப எவ்வளவு நேரம் ஆகும்.

(a) 7 மணி (b) 8 மணி **(c) 7 மணி 30 நிமிடம்** (d) 8 மணி 30 நிமிடம்

197. $x - y = -6$ ; $xy = 4$ $x^3 - y^3$ - ன் மதிப்பு காண்.

**(a) – 288** (b) – 388 (c) – 268 (d) – 278

KALAI IAS ACADEMY

198. 7 மனிதர்கள் ஒரு வேலையை 12 நாட்களில் முடிப்பர். அவர்கள் வேலையை ஆரம்பித்து 5 நாட்களுக்கு பிறகு இரண்டு மனிதர்கள் வேலையை விட்டுச் சென்றுவிட்டனர். இன்னும் எத்தனை நாட்களில் மீதம் உள்ளவர்கள் அந்த வேலையை முடிப்பர்?

(a) 5.8 நாட்கள் (b) 6.8 நாட்கள் **(c) 9.8 நாட்கள்** (d) 8 நாட்கள்

199. A, B குழாய்கள் ஒரு தொட்டியை முறையே 5 மணி நேரம், 6 மணி நேரத்தில் நிரப்புகின்றன. குழாய் C அத்தொட்டியை 12 மணி நேரத்தில் காலி செய்கிறது. 3 குழாய்களும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால், தொட்டி நிரம்பும் நேரம்.

(a) $1\frac{13}{17}$ மணி நேரம் (b) $2\frac{8}{11}$ மணி நேரம் **(c) $3\frac{9}{17}$ மணி நேரம்** (d) $4\frac{1}{2}$ மணி நேரம்

200. $(x + m)(x + n) = x^2 + 6x + 5$ எனில் $m^2 + n^2$ - மதிப்பானது.

(a) 25 **(b) 26** (c) 31 (d) 24

KALAI IAS ACADEMY